2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து வாங்கும் மின்சாரம்

*வினா எண். 745 திரு கு. ரமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ்நாடு மின்சாரம் வாங்குகிறதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

இ) கேரளத்திலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் நாள் ஒன்றுக்கு மொத்தம் எவ்வளவு மின்சாரம் வாங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தற்போது இல்லை,

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) கேரளத்திலிருந்து மட்டும் தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 2.3 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வாங்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தற்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சி காரணமாக மின்சார உற்பத்தி பாதிக்கும்படியான அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்போது மின்வெட்டு எங்கு பார்த்தாலும் மிகவும் அதிகமாகி மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது. பலவிடங்களில், பலவீடுகளில் திடீர் திடீர் என்று மின்சாரம் நின்று போகும்படியான நிலை நடைமுறையில் இன்று ஏற்பட்டிருக்கிறது, எனவே இதைத் தடுக்கக்கூடிய முறையில் முன்கூட்டியே இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே புனல் மின்திட்டங்கள் முழுமையாக வேலை செய்யக்கூடிய விதத்தில், தற்போது ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை உணர்ந்து என்ன விசேஷ நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புனல் மின் நிலையங்கள் மூலம் ஏற்படும் பற்றாக்குறையை அனல் மின் நிலையங்களை சரிவர இயக்குவதின் மூலம்தான் சீர் செய்ய முடியும். கேரள மாநிலத்திலிருந்து நாம் எவ்வளவு மின்சாரம் பெறுகிறோம் என்ற விவரத்தை அத்தர் மூலக்கேள்வியில் கேட்டிருக்கிறார்கள். மின் பற்றாக்குறையை எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்பதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தர இயலும்.

1981 ஏப்ரல் 14]

திரு. கு. ரமணி : கேரளாவிலிருந்து நாம் மின்சாரம்பெறுவது என்பது நம்மிடம் மின்சாரம் போதாமல் இருப்பதால்தான். ஆகவே மூலக்கேள்வியோடு பூர்ணமாக இணைந்த கேள்வியைத் தான் கேட்டிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தர இயலும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அதற்காக எவ்வளவு கேள்விகள் போடவேண்டு மென்றாலும் நான் தயாராகயிருக்கிறேன். அனல் மின்நிலையங் களில் கூட இன்றைக்கு போதிய அளவு நிலக்கரி கிடைக்காமல் ஒரு ஸீரியஸ் க்ரைஸிஸ் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதையும் மனதில் கொண்டு இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க என்ன விசேஷ நடவடிக்கைகளை — கேரளாவிலிருந்து அதிகமான அளவிற்கு மின்சாரம் பெறுவது உட்பட — அரசாங்கம் எடுக்கபபோகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தேவையான நிலக்கரியைப் பெற்று அனல் மின் உற்பத்தியை அதிகரிக்கும் அளவிற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் அரசு மேற்கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். மேலும் அனல் மின் உற்பத்தியை பெருக்க அனல் மின் நிலையங்களை இன்னும் அதிக அளவில் அமைக்கவேண்டும் என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கும்போது அவர்களுக்குத் தேவையான சிமெண்டைக் கொடுத்து, பண்டம் மாற்று முறையில் நடந்தது. அதைப்போல் நிரந்தரமாக அவர்களுக்குத் தேவையான அரிசி முதலியவைகளைக் கொடுத்து, நமக்கு நிரந்தரமாக இருக்கும் மின்சாரப் பற்றாக் குறையைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிமெண்டைப் பொறுத்தவரையில் பண்ட மாற்று முறையில் மின்சாரம் பெற்றுக் கொண்டு வருகிறோம். அரிசியைப் பொறுத்த வரையில் அந்த நிலை ஏற்படவில்லை. கேரளத்தைப் பொறுத்த வரையிலும்கூட அவர்களுடைய சுயதேவை அதிகரித்து வருகிறது என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் கூடுதலாக மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றினால், நமக்கும் உதவி செய்ய முடியும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து தமிழகம் பெறக்கூடிய மின்சாரத்திலிருந்து பாண்டிச்சேரி மாநிலத்திற்கு எவ்வளவு வழங்கப்படுகிறது? எந்த அடிப்படையில், கேரளத்திலிருந்து நாம் என்ன விலைக்கு வாங்கு கிறோம்? எத்தனை சதவிகிதம், என்ன விலைக்கு பாண்டிச்சேரிக்கு நாம் கொடுக்கிறோம்?

[1981 ஏப்ரல் 14

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் வாங்குகிற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 28 பைசா தருகிறோம். நாம் பொதுவாக, தமிழகத்தின் மொத்தத் தேவைக்கு வாங்குகிறோம். பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் தேவையானதை தனியாக எச். டி. சர்வீஸ் முறையில் மின்சாரம் தருகிறோம். தமிழகத்திலே மின் பற்றாக்குறைக்கு சில ஒழுங்குமுறைகள். அதாவது ரிஸ்ட்ரிக்ஷன் அண்டு கன்ட்ரோல் வைத்திருக்கிறோமோ, அப்படி பாண்டிச்சேரிக்கும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், இன்னும் அவர்கள் கடைப்பிடிக்க மறுக்கிறார்கள்.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலிருந்து மின்சாரம் வாங்குவதில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். மின்சாரத்திற்கு அந்த அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் அணுகியிருந்து, அவர்கள் அதை மறுத்தார்களா? ஏதாவது அதைப்பற்றி கருத்து சொன்னார்களா? இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியை முன்னிட்டு, அவர்களை அணுகக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலும் நம்மைப்போல் பற்றாக்குறை இருக்கிறது. இருந்தாலும், பருவ மழைவந்து, 3–10–80 அன்று கர்நாடக முதல்வரைச் சந்தித்து, உதவ வேண்டுமென்று கேட்டேன். அவர் அந்த மாதம் மட்டும் ஒரு மாதத்திற்கு 1 மில்லியன் யூனிட் கர்நாடகத்திலே கூடுதல் உற்பத்தி செய்ய வாய்ப்பிருந்த காரணத்தால், கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு பற்றாக்குறை வந்துவிட்டது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மைக் வைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, கேரளாவிலிருந்து 2, 3 இலட்சம் யூனிட் நமக்கு கிடைப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அதே நேரத்திலே இன்றைக்குக் கிராமாந்திரப் பகுதிகளில் மொத்தமாக பற்றாக்குறை நிலை இழந்து, நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம்தான் விவசாயத்திற்கு கொடுக்கப்படுகிறது. என்னுடைய கிராமத்தில் பம்பு செட்டுகள் ஓடாத நிலையிருப்பதை, நான் நேரிலேயே பார்த்துவிட்டு வந்தேன்........

1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியையொட்டி துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து 2.3 இலட்சம் யூனிட் நமக்கு கிடைப்பதாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிலைமை தொடர் கதையாக நீண்டுக் கொண்டு வந்திருக்கிறது. பல வருஷங்களாக நாம் தொடர்ச்சியாக, கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். தன்னிறைவு எய்தக் கூடிய முறையில் அந்த தொடர்கதையாக உள்ள மின்சாரம் வாங்குவது எப்போது நிறுத்தப்படுமா? என்பதை தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே 2.3 இலட்சம் அல்ல. 23 இலட்சம் யூனிட்டுகளை நாம் நாள் ஒன்றுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதாவது 2.3 மில்லியன் யூனிட்டுகள். நாமே தன்னிறைவு எய்த வேண்டும் என்கிற அடிப்படையிலே, திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இன்னும் மேற்கொண்டு பல திட்டங்களைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். சுமார் 2,000 மெகா வாட் பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று ஓரளவுக்கு அது நிறைவேற்றப்படுமானால், நாம் தன்னிறைவை எய்த முடியும். அண்டை மாநிலங்களி லிருந்து மின்சாரம் வாங்குவதும், தருவதும் இயல்பு.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலும் மற்ற அண்டை மாநிலங்களில் இருந்து ஆண்டுதோறும், பெறக்கூடிய மின்சாரத்திற்கு எத்தனை கோடி ரூபாய் தமிழக அரசு செலவழிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேரளாவில் 12.2.80 முதல் 31.12.80 வரை 845 மில்லியன் யூனிட்டுகள் வாங்கியிருக்கிறோம். அதை 28 பைசாவில் பெருக்கினால் எவ்வளவு தொகை என்பது தெரியும்.

கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் இயக்கும் நீர் ஒதுக்குச் சுவர்களிற் இடிபாடுகள்

*வினா எண். 746 திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: